உ

கடவுள் துணை.

சித்திராங்கிக்கும் சாரங்கதரனுக்கும் தர்க்கம்.

புராணப்பாட்டு.

(முதற்பாகம்)

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோள்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும், அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்டுகார்டு அளவுள்ளவிநோதமாகிய பொட்டோகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோள்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள்துணை,

சித்திராங்கிக்கும் சாரங்கதரனுக்கும் தர்க்கம்.

புராப்பாட்டு.

விநாயகர்-வணக்கம்.

விருத்தம்.

மைந்தன்சாரங்கனுக்கும் மாதுசித்திராங்கியற்கும்
விந்தையாய்புராவினாலே விளைந்ததோர்தற்கந்தன்னை
செந்தமிழாலேயின்றுச் செப்பிடப்புராவின்பாட்டு
கந்தர்க்குமூத்தோனெங்கள் கணபதிகாப்புத்தானே.

சாரங்கதரன் சொல்.

இங்குவந்த தென்புறாவை
எடுத்திருந்தால் கொடுத்திடம்மா
அங்குசெல்ல வேணும்விளை
யாடவேணும் அம்மம்மா
அன்னையே-என்னையே-அனுப்பவேணுந்தடை
யாகுதிந்த நேரமம்மா.

சித்ராங்கி சொல்.

உன்புருயிருக்குதடா
ஓடிவாடா கண்மணியே
அன்புருத சிற்றனேயே
அசட்டைசெய்கு ருய்மகனே

கிட்டிநீ-எட்டிவா-இஷ்டப்படிக்கேகொடுப்பேன்
இங்குவந்த துன்புருவை

(சார) தாருமம்மாயென்புருவை
தாயாரேயே சின்னம்மா
நேரமிகு வாகுதிப்போ
நீயேதயை செய்யம்மா அன்னேயே

(சித்) மாரனைப்போல் வடிவுடைய
மாதருக்குல் லாசலீலா
கோறும்புரு தருவேன்பாலா
கூசாமலுள்வா வைபோகா கிட்டிநீ

(சார) மைந்தனைக்கண் டிந்தவார்த்தை
மாதாசொல் லத்தகுமா
சிந்தை கலங்குதிந்த
சேயன்மனந்துடிக்குதம்மா அன்னேயே

(சிக்) அனுப்புதற்கு தடையுமில்லை
அழகுகண்ணே யெந்தன்சிலா
உனைப்பிரிய மனமுமில்லை
ஒருமுழந்தா வாவாபாலா — கிட்டிநீ

(சார) கள்ளமொன்று மறியேனம்மா
காளை வுன் சுதனம்மா
பிள்ளையிடம் யித்தவார்த்தை
பேசத்தகுமோ சின்னம்மா — அன்னையே

(சித்) கும்பிட்ட தெய்வமிப்போ
குருக்கிட்டால் போலேபாலா
தெம்பட்டாயே யெனக்கு
தெகுட்டாக் கனியேசிலா — கிட்டிநீ

(சார) ஆசை புருவைதேடி
அன்னையுன்னை கேட்கவந்தேன்
கூசாமல்நீ சொல்வர்த்தை
குழந்தைகேட்டு மிகபயந்தேன் — அன்னையே

(சித்) பயமொன்று மில்லைசொன்னேன்
பட்சமுடன் வருவாய்பாலா
நயம்பெறவே சமயமிது
நாணங்கள் வையாதேசிலா — கிட்டிநீ

(சார) நிற்கநேர மில்லையம்மா
அக்குறிப்பு சொல்லாதம்மா
காக்கவில்லையோ சின்னம்மா
காலம்போக்கு றுபேசும்மா — அன்னையே

(சித்) ஒருநாளும் வந்ததில்லை
திருநாள்போல் வந்தாய்பாலா
தருவேன் தருவேனடா
சாரங்க தாரலோலா — கிட்டிநீ

(சார) மணிப்புறுவை தேடியல்லோ
மைந்தனிங்கு வந்தேனம்மா
பணிவேனுந்தன் பாதமல்லோ
பட்சம்வைத்து நீகொடம்மா — அன்னையே

(சித்) தருவதற்கு தடையொன்றில்லை
தங்கமேநீ யிங்குவாடா
குறவுமொன்றும் வாருதடா
கூறும்மொழி தள்ளாதடா — கிட்டிநீ

(சார) விந்தையுள்ள வெண்புறுவை
தந்திடம்மா யான்போறேன்
மந்திரி வழிபார்த்துச்
சிந்தைவாடிக் காத்திருப்பான் — அன்னையே

(சித்) கார்த்திருந்தா லென்னயிப்போ
கண்மணியே யுள்ளவாடா
பார்த்திருக்க வுன்புருவை
பாலகனே தருவனடா கிட்டிநீ

(சார) அறியாத பாலனிடம்
அறையுமொழி யிதுசரியோ
சிறியதாயா ரும்நீயும்
சொல்லத்தகுமோ குறியோ அன்னேயே

(சித்) குறியறிந்தப் படியதினல்
பிரியமா யழைத்தேன்பாலா
நிறையறிந்து வுன்புருவை
நீயேவாங்கி போசிலா கிட்டிநீ

(சார) பழியான வார்த்தைகளை
பகருகிரு யேனேவம்மா
அழிய நரகில்தள்ளி
அடிப்பானே யேமனம்மா அன்னேயே

(சித்) பழியேது பாவமேது
பாலகாகேள் காமுகற்கு
வழியறியாப் பேசுகிருய்
வறைகிறேன்கே ளுந்தனுக்கு கிட்டிநீ

(சார) அன்னைபிதா குருதெய்வம்
ஆகவெல்லாம் நீயிருந்து
பன்னுஞ்செஞ்சி யேகாம்பரம்
பாடுந்தமிழ் பயனறிந்து. அன்னையே

புராப்பாட்டு முதற்பாகம்
முற்றிற்று.